**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**<u>In the Court of XI Additional Special Judge for CBI Cases</u>**

**<u>(CBI Cases Relating to Banks and Financial Institutions)</u>**

**<u>Chennai - 600 001.</u>**

| | | |
|---|---|---|
| Calendar Case | : | C.C. No. 11/2006 |
| Deposition of witness for | : | PW 24 |
| Name | : | Mrs. Vanitha |
| Father's / Husband's Name | : | |
| Address for Communication | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion & Caste | : | |
| Age | : | years Mobile: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the 3rd day of July, 2018.

---

**முதல் விசாரணை**

தற்போது நான் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நிலையத்தில் உதவி பொது மேலாளர் (கணக்கு) பிரிவில், மாதவரத்தில் பணியில் உள்ளேன். 2005ம் ஆண்டில் நான் ஆவின் நிறுவனத்தில் விற்பனை பிரிவில் நந்தனத்தில் உதவி மேலாளராக பணியிலிருந்தேன். அது சமயம் ஆர்.ஏழுமலை என்பவர் எங்கள் அலுவலகத்தில் செக்கிங் அசிச்டென்ட்டாக வேலை பார்த்து வந்தார்.

சிபிஐ ஆய்வாளர் கேட்டதின் படி 23.3.2005ல் எங்கள் அலுவலக பதிவேடுகளிலிருந்து மேற்சொன்ன ஆர்.ஏழுமலை என்பவரின் சம்பள சான்று நான் வழங்கினேன். அது பிப்ரவரி 2002 மாதத்துக்குரியது. என்னால் வழங்கப்பட்ட சம்பள சான்று **அ.சா.ஆ.100 (2 தாள்கள்)** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

தற்போது என்னிடம் காட்டப்படும் ஆர்.ஏழுமலை என்பவரின் வீட்டுக்கடன் சம்பந்தமான பைலில் காணப்படும் புகைப்படம் மற்றும் கையெழுத்துகள் ஆர்.ஏழுமலை என்பவருடையதுதான். அது **அ.சா.ஆ.101 வரிசை** (File) ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.ஆ.101ல் காணப்படும் ஆர்.ஏழுமலை என்பவரின் சம்பள விவரம் மற்றும் சம்பள சான்று எங்கள் அலுவலகத்திலிருந்து வழங்கப்படவில்லை. அ.சா.ஆ.100ம் அ.சா.ஆ.101ம் சம்பள சான்று வேறுபாடுகளுடன் உள்ளது. இது சம்பந்தமாக சிபிஐ அதிகாரிகள் விசாரித்தார்கள்.

**<u>37வது எதிரி மற்றும் மற்ற எதிரிகள் தரப்பில் கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் குறுக்கு விசாரணை</u>**

அ.சா.ஆ.100 நான் வழங்கியதுதான், அது சரியான சம்பள சான்று தான். அ.சா.ஆ.101 தான் போலியான சான்று என்று சிபிஐயில் கூறுகிறார்கள், எங்கள் அலுவலகத்தில் அது வழங்கப்படவில்லை. அ.சா.ஆ.101ல் சம்பள பட்டியலில் ஊழியரின் பிடிமானம் சம்பந்தமாக எங்கள் அலுவலகத்தில் ரூ.5,944/- உள்ளது, அந்த அ.சா.ஆ.101 சம்பள பட்டியலில் ரூ.1,398/- என்று தவறாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிபிஐ விசாரணையில் நான் இந்த ஆவணத்தை பார்த்தேன். என்னிடத்தில் சிபிஐ வாக்குமூலம் எதுவும் பதியவில்லை. இந்த லெட்டர் நாங்கள் சிபிஐயில் கொடுத்தோம். நான் நீதிமன்றத்தில் சொல்கிற விவரங்களை சிபிஐயிடத்தில் வாக்குமூலமாக சொல்லவில்லை. ஏழுமலையின் மொத்த சம்பளம் ரூ.8,224/- என்பது சரி. ஏழுமலை மீது வழக்கு இல்லை என்று இந்த நீதிமன்றம் அவரை விடுவித்தது எனக்கு தெரியாது. நீதிமன்ற சம்மனில் இந்த வழக்கிறகு சாட்சி சொல்ல வரவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர் மீது ரூ.101106 அதிகமாக கடன் பெற்றுள்ளதாக வழக்கு போட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்றத்தில் அவர் இல்லை. 4 நாட்களுக்கு முன்பு தான் எனக்கு சம்மன் வழங்கப்பட்டது. எங்களது ஆபிசில் தபாலில் வந்தது, சிபிஐயில் இருந்து சம்மன் வரவில்லை. நான் கையெழுத்து போட்ட லெட்டர் சம்பந்தமாக சாட்சி சொல்ல வரவேண்டும் என்றார்கள் அது சம்பந்தமாக சாட்சி சொல்ல வந்தேன். நேற்று அரசு வழக்கறிஞர் சேம்பருக்கு வந்தேன். என்னிடம் அந்த லெட்டரை காண்பித்து நீங்கள் கொடுத்ததா உங்கள் கையெழுத்து போட்டதா என்றார்கள், வேறொன்றும் எனக்கு தெரியாது.

ஏழுமலையை வழக்கிலிருந்து விடுவித்தது நீதிமன்றத்திற்கு வந்த பிற்பாடு தான் தெரியும். அவர் மீது போடப்பட்ட வழக்கில் எந்த குற்ற முகாந்திரம் இல்லை என்று அவரை விடுவித்ததை பற்றி எனக்கு தெரியாது. நான் அலுவலகத்தில் அலுவலக பணி (On Duty) யில் வந்துள்ளேன். நான் இந்த அலுவலகத்திற்கு வந்ததற்கு உண்டான செலவு தொகையை எங்கள் அலுவலகத்தில் கேட்க மாட்டேன். (அரசு தரப்பு வழக்கறிஞர் இந்த கேள்விக்கு ஆட்சேபணை தெரிவித்தார், அது பதிவு செய்யப்படுகிறது)

<u>**மறு விசாரணை**</u> - இல்லை

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII code of Criminal Procedure)**

**In the Court of XI Additional Special Judge for CBI Cases**

**(CBI Cases Relating to Banks and Financial Institutions)**

**Chennai - 600 001.**

| | | |
|---|---|---|
| Calendar Case | : | C.C. No. 11/2006 |
| Deposition of witness for | : | PW 25 |
| Name | : | Mrs. Seeli Indira |
| Father's / Husband's Name | : | |
| Address for Communication | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion & Caste | : | |
| Age | : | years Mobile: |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on this the 3rd day of July, 2018.

---

**Chief Examination:**

Presently I am working as Assistant Commissioner, GST South Commissionerate, Chennai. During 2005, I was working as Superintendent of Central Excise in the Office of the Deputy Commissioner of Central Excise at Teynampet Annasalai. While I was working that office, P.S.Chandra Mohan was working as Inspector of Central Excise in our division. As I was the custodian of the pay particulars of Mr.Chandra Mohan, as requested by CBI on 17.3.2005, I issued a certificate incorporating the pay particulars of P.S.Chandra Mohan for the month of March 2002 from our official records. The certificate issued by me dated 17.3.2005 is now marked as **Ex.P.102 (1 sheet)**.

Now I am shown the housing loan file of P.S.Chandra Mohan bearing his photograph and signature and the same is now marked as **Ex.P.103** (Entire file). Page no.43 and 58 of Ex.P.103 are the pay particulars and salary certificate of P.S.Chandra Mohan and the pay particulars contained therein are not tallying with our official records and they are not issued from our office.

**Cross examination by A37 and other accused by the learned Senior Counsel**

The CBI never examined me.

**Re-examination** - NIL